பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
24 09 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள்-

1. அமெரிக்க பயணம் ஆக்கப்பூர்மாக அமைந்திருந்தது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. மாநில சட்டமன்றங்களின் செயல்பாடுகளை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.
3. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைக்கு நாளை நடைபெறவுள்ள இரண்டாவது கட்ட தேர்தலுக்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளன.
4. வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. **Hangzhou** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை பட்டம் வென்றது.

இனி விரிவான செய்திகள் ---

**[]<<<>>>[]**

அமெரிக்காவுக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்ட பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று புதுதில்லி புறப்பட்டார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தாம் மேற்கொண்ட அமெரிக்க பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்ததாக கூறியுள்ளார்.

பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் ஆக்கப்பூர்வமான திட்டங்கள் குறித்து தாம் விவாதித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்த உலகின் வளர்ச்சிக்கான பல்வேறு அம்சங்கள் ஆலோசிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமது அமெரிக்க பயணத்தின்போது குவாடு தலைவர்கள் உச்சிமாநாடு மற்றும் ஐ நா பொதுச்சபை உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு பிரதமர் உரையாற்றினார்.

தமது பயணத்தின் முதல்கட்டமாக அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடனை வில்மிங்டனில் சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் கூட்டு முயற்சிகள் மற்றும் உலகளாவிய பாதுகாப்பு குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது இந்தோ — பசிபிக் பொருளாதார கட்டமைப்புக்கான ஒப்பந்தம், இந்திய — அமெரிக்க போதைப்பொருள் கடத்தல் தடுப்புக் கொள்கை உள்ளிட்ட முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

குவாட் உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு பேசிய பிரதமர், இந்திய பெருங்கடல் பகுதியில் உள்ள நாடுகளுக்கிடையே பொருளாதாரம், எல்லை பாதுகாப்பு, அரசியல் போன்றவற்றில் இந்தியாவின் தலைமைத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார்.

ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளின் பிரதமர்களுடன் இருதரப்பு விஷயங்கள் குறித்தும் பிரதமர் முக்கிய ஆலோசனை நடத்தினார்.

நேபாள் நாட்டின் பிரதமர் திரு சர்மா ஒளி, குவைத் பட்டத்து இளவரசர் ஷேக் சபா காலித் அல் ஹமீது, பாலஸ்தீன அதிபர் திரு முகமது அபாஸ் ஆகியோருடனும் திரு நரேந்திரமோடி இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

ஐ நா பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், மின்னணு பொது கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.
மனிதகுலத்திற்கான சேவைக்கு உலக நாடுகள் அனைத்தும் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.
ஐ நா பொதுச்சபை கூட்டத்திற்குப் பின் உக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கியை சந்தித்து பேசியபோது, ரஷ்யா – உக்ரைன் இடையேயான போருக்கு அமைதியான தீர்வு ஒன்றை காண இந்தியா முழு ஒத்துழைப்பையும் அளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஐ நா பொதுசபைக் கூட்டத்தையொட்டி நியூயார்க் நகரில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர், பங்களாதேஷின் வெளியுறவுத்துறை ஆலோசகர் திரு **Touhid Hossain**-யை சந்தித்து பேசினார்.
இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்தும், தற்போது அந்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள இடைக்கால அரசு குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.
பங்களாதேஷில் திரு முகமது யூனுஷ் தலைமையிலான இடைக்கால அரசு அமைக்கப்பட்டுள்ள நிலையில், இருதர்பபு உறவுகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறிதது்ம், இரு நாடுகளுக்கும் பொதுவான முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறிதது்ம் இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

மாநில சட்டமன்றங்களின் செயல்பாடுகளை வலுப்படுத்த வேண்டுமென்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.
புதுதில்லியில் நடைபெற்ற பத்தாவது காமன்வெல்த் நாடாளுமன்ற கூட்டமைப்பு மண்டல மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சிக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில சட்டமன்றங்களை வலுப்படுத்த வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கருத்துக்களை முன் வைத்ததாகக் கூறினார்.
நீடித்த மற்றும் உள்ளார்ந்த வளர்ச்சிக்கு சட்டமன்றங்கள் சிறப்பாக செயல்பட வேண்டியது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.
நாடு முழுவதிலுமிருந்து 30-க்கும் மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த சட்டப்பேரவைத் தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.

**[]<<<>>>[]**

மத்திய ஜவளித்துறையின் சார்பில் தூய்மையே சேவை இயக்கப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.
மத்திய ஜவுளித்துறை அமைச்சகத்தின் அலுவலகங்கள் மட்டுமன்றி இந்திய சணல் கழகம், தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப நிறுவனம், ஜவுளி கமிட்டி உள்ளிட்ட பல்வேறு துணை அமைப்புகளிலும் தூய்மையே சேவை இயக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
புதுதில்லியில் உள்ள ஜவுளித்துறை அமைச்சகத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சக ஊழியர்கள் தூய்மைப்பணிகளில் ஈடுபட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.
பொது இடங்கள் மற்றும் முக்கிய வளாகங்களில் தூய்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைக்கு நாளை நடைபெறவுள்ள இரண்டாவது கட்ட தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

26 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதற்காக 35 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பணியில் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வாக்குப்பதிவு நடைபெறும்போது கண்காணிப்பதற்காக வாக்குச்சாவடிகளில் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ள இடங்களில் 24 மணி நேரமும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

தேர்தலை நேர்மையாகவும், சுதந்திரமாகவும், அமைதியாகவும் நடத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதகா தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் பல்வேறு தரப்பு மக்களும் ஒரே நாடு — ஒரே தேர்தல் நடைமுறைக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

ஒரே சமயத்தில் தேர்தல் நடத்தப்படுவதால் தேர்தல் செலவினங்கள் கணிசமாக குறைவதோடு மட்டுமன்றி தேர்தலை சுதந்திரமாகவும், நியாகமாகவும் நடத்துவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று தூத்துக்குடியைச் சேர்ந்த பொதுமக்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - பொதுமக்கள் ) --- 46 செகண்ட்*

**[]<<<>>>[]**

அகில இந்திய மருத்துவ கல்விக்கழகம் எய்ம்ஸ் தனியார் நிறுவனத்துடன் இணைந்து ரொபோட் உதவியுடன் அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்கான பயிற்சி மையம் ஒன்றை அமைப்பதற்கு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

எய்ம்ஸ் டாவின்சி ரொபோட்டிக் அறுவை சிகிச்சை பயிற்சி மையம் என்று அழைக்கப்படும் இந்த மையத்தின் மூலமாக ரொபோட் உதவியுடன் சிக்கலான அறுவை சிகிச்சைகளை செய்வது குறித்த உயர்தரத்திரான பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பொது அறுவை சிகிச்சை, மகப்பேறு அறுவை சிகிச்சை, சிறுநீரக அறுவை சிகிச்சை போன்றவற்றிற்கான பயிற்சி முறைகள் முதல்கட்டமாக இந்த மையத்தின் மூலம் கொண்டுவரப்பட உள்ளன.

எய்ம்ஸ் மருத்துவக் கல்விக் கழகத்தின் இயக்குநர் டாக்டர் ஸ்ரீனிவாஸ், ரொபோட்டிக் அறுவை சிகிச்சையில் தமக்குள்ள அனுபவத்தை தேசிய அளவில் விரிவாக்கம் செய்யும் நோக்கில் கொண்டுவர தாம் உறுதியான முயற்சி மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

இந்த தொழில்நுட்பத்தை கொண்டு வருவதன் மூலம் அறுவை சிகிச்சை தொழில்நுட்பம் உயர்நிலைக்கு செல்லும் என்றும், நோயாளிகளுக்கான அறுவை சிகிச்சை குறைந்த நேரத்தில் முடிக்கப்பட்டு அவர்கள் காப்பாற்றப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று டாக்டர் ஸ்ரீனிவாஸ் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) --42-- செகண்ட்*

**[]<<<>>>[]**

**Hangzhou** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்த இணை 4-6, 7-6, 10-7 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் **Constantin frantzen – Hendrik jebens** இணையை வென்று பட்டத்தை கைப்பற்றியது.

**[]<<<>>>[]**

இத்தாலியில் நடைபெற்ற உலக ஸ்கேட்டிங் போட்டியில் இந்திய மகளிர் அணி வெண்கலப்பதக்கம் வென்றது.

**[]<<<>>>[]**

சீனாவில் நடைபெற்று வரும் **Chengdu** ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் அல்பனோ ஒலிவெட்டி இணை – பிரான்ஸ் இணையிடம் தோல்வியடைந்தது.

**End of News**